# திராவிடத்தால் வாழ்கிறோம்

772

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

குமரன்தாஸ்

1 புதிய தொடர்

**திரையுலகில் மாபெரும் புரட்சி செய்த கலைஞரின் கைவண்ணத்தில் உருவான படைப்புகளின் பன்முகப் பரிமாணங்களை விளக்கும் தொடர்.**



# திரைக்கதை வசனம் கலைஞர் மு.கருணாநிதி

தலைவர் கலைஞர் 1947-ஆம் ஆண்டு தனது 23-ஆம் வயதில், தமிழ்த் திரைத்துறைக்குள் காலடி எடுத்து வைத்தார் என்பதையும், அவர் முதன்முதலாகத் திரைக்கதை வசனம் எழுதிய திரைப்படம் ‘ராஜகுமாரி’ என்பதையும் அனைவரும் அறிவோம். கலைஞருக்கு முன்பே திராவிட இயக்கத்தைச் சார்ந்த பலர், தமிழ்த் திரைத்துறைக்குள் இயங்கிவந்தனர். குறிப்பாக, உடுமலை நாராயண கவி, என்.எஸ்.கிருஷ்ணன், டி.ஏ.மதுரம், எஸ்.எஸ்.ராஜேந்திரன் போன்றவர்கள் இருந்தனர்.

ஆனால், அவர்களுக்குத் தமிழ்த் திரைத்துறையின் திசையை முழுமையாக மாற்றியமைக்கும் வாய்ப்பும் வல்லமையும் கைவரப்பெறாமல் இருந்தது. எடுத்துக்காட்டாக, தலைவர் கலைஞர் தமிழ்ச் சினிமாவுக்குள் நுழைந்த 1947-ஆம் ஆண்டு மற்றும் அதற்குச் சற்று முந்தைய 1946 - இல் திரைப்படங்கள் எதைப் பேசிக் கொண்டிருந்தன என்பதைப் பார்த்தால் அன்றைய நிலைமையை நாம் புரிந்து கொள்ள முடியும்.

1946-இல் வந்த திரைப்படங்களில் சில: அர்த்தநாரி, சகடயோகம், லவங்கி, வால்மீகி, வித்யாபதி, குமரகுரு......, 1947 - இல் வந்தவை: ஆயிரம் தலை வாங்கிய அபூர்வ சிந்தாமணி, ஏகம்பவாணன், கன்னிகா, கடகம், கங்கணம், குண்டலகேசி, சித்ரபகாவலி...... இத்தகைய புராண இதிகாசத் திரைப்படங்களுக்கு நடுவேதான் கலைஞர் நுழைந்து, தனது திரைப்பட வசனங்களின் மூலம் நீதியையும், பகுத்தறிவையும், மன்னராட்சியையும் எதிர்த்து, மக்களாட்சியையும், பெண்ணுரிமையையும், தமிழ்ப் பெருமையையும் பேசி, அதுவரையிலான திரைப்பட உலகை அதிர்ச்சியில் ஆழ்த்தினார்.

நாம் மேலே கூறிய 1946, 1947 காலத் திரைப்படங்களின் புராணப் பெயர்களுக்கு மத்தியில் கலைஞர் கதை, திரைக்கதை, வசனம் எழுதிய படங்களின் பெயர்களை முதலில் ஒப்பிட்டுப் பாருங்கள் அந்த வேறுபாடு பளிச்செனத் தெரியும் ‘ராஜகுமாரி’ (இது முதல் படம் என்பதால், இயக்குனரின் தாக்கம் சற்றுக் கூடுதலாக இருக்கும்), ‘மந்திரி குமாரி’, ‘அரசிளங்குமரி’, ‘மணமகள்’, ‘மருதநாட்டு இளவரசி’.

இவ்வாறு பெயரிலேயே முதலில் ஒரு தலைகீழ் மாற்றத்தைச் செய்து அதுவரையிலான தமிழ்ச் சினிமாவின் முகத்தையே மாற்றிக் காட்டினார் என்றுதான் சொல்ல வேண்டும். முகத்தை மட்டுமல்ல, உடலையும் உயிரையும் கூட முற்றிலுமாக மாற்றியமைத்தார் என்றும் சொல்லலாம். ஆம், கலைஞர் கதை, திரைக்கதை வசனம் எழுதிய திரைப்படங்கள், பல அதிசயங்களை நிகழ்த்திக் காட்டின.

### அழகுத் தமிழில் ஆதிக்க எதிர்ப்பு

அதுநாள் (1947) வரையிலான திரைப் படங்களில் சில புராணக் கதையினூடே தேச விடுதலையையும், தீண்டாமை ஒழிப்பையும் மறைத்து மறைத்துப் பேசின. ஆனால், கலைஞரோ மன்னராட்சிக் காலக் கதையைப் பேசிய திரைப்படங்களுக்குள், மன்னராட்சியை எதிர்த்தும் மக்களாட்சியைப் போற்றியும் அழகுத் தமிழில் வசனம் எழுதினார். அதிலும் ஒரு படி மேலே போய், தமிழ்ச் சமூக அமைப்பில் பார்ப்பன மேலாண்மையை, பார்ப்பன ஆதிக்கத்தை மக்களுக்குப் புரிய வைக்கும்விதமாக பார்ப்பன மத குருவின் அதிகாரத்திற்குக் கட்டுப்பட்டு ஆடும் தஞ்சாவூர் தலையாட்டிப் பொம்மைகளாகவே அன்றைய தமிழ் அரசர்கள் இருந்தார்கள் என்பதை, எடுத்துக்காட்டும் விதமாக பொம்மை அரசர்களை (ராஜகுமாரி, மந்திரிகுமாரி) தனது திரைக்கதையின் மூலம் பல படங்களில் படைத்துக் காட்டினார்.

> **தலைவர் கலைஞரைப் பொறுத்தவரை திரையில் எதைப் பேசினாரோ எதை எழுதினாரோ அதையே அரசியல் அதிகாரம் கையில் கிடைத்தபோது நடைமுறைப்படுத்தியும் / உண்மையாக்கியும் காட்டினார்.**

மேலும், மன்னராட்சியில் ஏழை எளிய மக்கள் ஒடுக்கப்படுவதையும், அவர்களது செல்வம் அரசின் கொடிய வரிவிதிப்பால் சுரண்டப்பட்டு, மக்கள் வீதியில் இறங்கிப் போராடுவதையும் கலைஞர் கதைவசனம் எழுதிய பல திரைப்படங்களில் நாம் காணக்கூடிய ஒன்றாகும். இவை எல்லாம் 1947 - 1967 காலகட்ட ஆட்சியாளர்களுக்கு எத்தகைய கோபத்தினை ஏற்படுத்தி இருக்கும் என்று சிந்திக்கும், அதே நேரம் மக்கள் மத்தியில் எத்துனை வரவேற்பைப் பெற்றிருக்கும் என்பதையும் சிந்தித்துப் பாருங்கள்.

அதே போல கொடிய மன்னர்கள் அல்லது மத குருமார் அல்லது மந்திரி என்ற யாரோ ஒருவர் மக்கள் மீது தாக்குதல் தொடுக்கும் போது எளிய மக்களின் மத்தியில் இருந்து, ஒரு தலைவன் தோன்றி அடக்கு முறையை எதிர்த்துப் போராடும் காட்சியானது அன்றைய நிலப்பிரபுத்துவ ஒடுக்குமுறைக்கு எதிரான குரலைத் திரையில் எழுப்புவதாகவே அமைந்திருந்தன எனலாம். பின்னாளில் (1970 - 1980 களில்) கலைஞர் நேரடியாகவே பண்ணையாதிக்கத்தை எதிர்த்தும் பல திரைப்படங்களில் கதை, திரைக்கதை, வசனம் எழுதினார்.









இவ்வாறு கலைஞரின் திரைப்படங்கள் பல்வேறு ஆதிக்கங்களின் மீதும் ஒரே நேரத்தில் பலமுனைத் தாக்குதலைத் தொடுக்கும் படங்களாக அமைந்துள்ளன. சுருக்கமாகச் சொல்வது என்றால், அனைத்து வித ஆதிக்கங்களையும் எதிர்த்துத் தனது படங்களில் எழுதினார் என்று சொல்லலாம். இவ்வாறு கலைத்துறையில் ஆதிக்க எதிர்ப்பை முன்வைத்த அதே கலைஞர்தான் சமூக அரசியல் அரங்கில், ‘ஆதிக்கமற்ற சமுதாயம் படைத்தே தீருவோம்’ என்ற முழக்கத்தை முன்வைத்து அதற்காகப் பாடுபட்டார். ஆக, தலைவர் கலைஞரைப் பொறுத்தவரை திரையில் எதைப் பேசினாரோ எதை எழுதினாரோ அதையே அரசியல் அதிகாரம் கையில் கிடைத்தபோது நடைமுறைப்படுத்தியும் / உண்மையாக்கியும் காட்டினார்.

அதாவது சொன்னதை (எழுதியதை)ச் செய்தார், செய்வதையே சொன்னார், எழுதினார். அவ்வாறு தமிழ்த் திரையில் தலைவர் கலைஞர் எழுதிய,பேசிய ஆதிக்க எதிர்ப்புச் சமத்துவக் குரலையே இங்கு கேட்க உள்ளோம்.

## நாகை, இனி வளரும்!

நாகை மாவட்டத்தில், சிப்காட் அமைக்கப்படும் என்று ‘திராவிட மாடல் நாயகர்’ தமிழ்நாடு முதலமைச்சர் அறிவித்திருப்பது, அம்மாவட்ட மக்களிடையே பெரும் மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. இதுதொடர்பாக, கதிர் என்பவர் தனது சமூக வலை தளப்பக்கத்தில் எழுதியுள்ள பதிவில், “நாகப்பட்டினம் மாவட்டம், மத நல்லிணக்கத்திற்கும் மதம் சார்ந்த சுற்றுலாவிற்கும் பிரபலமான இடமாகும்.

ஆண்டுதோறும் லட்சக்கணக்கான மக்கள், வேளாங்கண்ணி மாதா கோவில். நாகூர் தர்ஹா, சிக்கல் சிங்காரவேலர் கோயில் ஆகியவற்றிற்கு வந்து செல்கின்றனர். அடிக்கடி பெட்ரோ கெமிக்கல் நிறுவனங்களை எதிர்க்கும் (நெடுவாசல், பனங்குடி) போராட்டங்களுக்காக செய்திகளில் இடம் பிடிக்கும் பகுதி என்பதைத்தவிர, பொருளாதார ரீதியாக எந்தவிதமான பெரிய கட்டமைப்பும் இல்லாத மாவட்டமாகும்.

இங்கு மக்களின் முக்கிய வருவாய் மூலங்கள், சுற்றுலா மற்றும் வேளாண்மை மட்டுமே, சமீபத்திய ஆண்டுகளில் ரியல் எஸ்டேட் தொழில்துறை வளர்ச்சி கண்டுள்ளது. ஆனால், பெரிய அளவில் தொழில் வாய்ப்புகள் இங்கு கிடையாது. அதனால் பெரும்பாலான படித்த இளைஞர்கள் வேலைக்காக வெளியூர்களுக்கும் வெளி மாநிலங்களுக்கும் வெளி நாடுகளுக்கும் குடிபெயர்ந்துள்ளனர்.

வரலாற்றில் முதன்முறையாக நாகையில் ‘சிப்காட் (SIPCOT) தொழிற் பூங்கா’ அமையவிருப்பதாக தமிழ்நாடு முதலமைச்சர் அறிவித்திருக்கிறார். முதலமைச்சர் அவர்களின் இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க அறிவிப்பால், நாகை மாவட்ட மக்கள் பெருமகிழ்ச்சி அடைந்துள்ளனர். இனி, கோவை போன்ற மேற்கு மாவட்டங்களைப் போலவே நாகையும் விரைந்து வளர முடியும். மற்ற மாவட்டங்களில் இல்லாத ஒரு வசதியாக, இங்கு இருக்கும் துறைமுகம் மாவட்டத்தின் வளர்ச்சியை இன்னும் வேகமாக்கும். டைடல் பூங்கா திட்டமும் விரைவில் வருமென்று எதிர்பார்க்கிறோம்” என்று பதிவிட்டுள்ளார்.

## ஃப்ளாஷ்பேக்



### 97 வயதிலும் உற்சாகமான பேராசிரியர்!



எம்.கருணாநிதி

பேராசிரியர் அவர்களின் 97-வது பிறந்தநாள் முன்னிட்டு, அவரை நேரில் சந்திக்கச் சென்றேன். உடல்நிலை குன்றி இருந்த நிலையிலும், கழகத் தொண்டர்களை உற்சாகமாக சந்தித்து வந்தார், அப்போது, என்னை கண்டதும் நலம் விசாரித்த பேராசிரியரின் பெருந்தன்மை என்றும் மறக்க முடியாத ஒன்று. அப்போது, அவருக்கு வாழ்த்து சொல்லி எடுத்துக்கொண்ட புகைப்படம் இது.

**– எம்.கருணாநிதி, தலைவர்,
செய்தித்தாள் விற்பனையாளர் சங்கம்,
சென்னை.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 90033-24473 மின்னஞ்சல்: youthwing@dmk.in

## கருவூலம்

### ‘ஆளுநர் சம்பளம் குறைக்கப்பட வேண்டும்’

1954-ஆம் ஆண்டுவாக்கில், ஆளுநருக்கு அரசுப் பணத்தில் இருந்து, 9 லட்சத்து 93 ஆயிரம் ரூபாய் செலவழிக்கப்படுவதை, தி.மு.க கடுமையாக எதிர்த்தது. அதுகுறித்து, ‘நம்நாடு’ இதழில் வாசகர்கள் தொடர்ச்சியாக கடிதங்கள் எழுதி வந்தனர். அப்படியான சூழலில் டிசம்பர் மாதத்தில், சட்டமன்ற கூட்டம் நடைபெற்றுக் கொண்டிருந்த நேரத்தில், செல்லப்பா என்கிற தொண்டர், கழகக் கொடியை ஏந்தியபடி, ‘ஆளுநர் சம்பளத்தை குறைக்க வேண்டும்’ என சட்டசபை வாசலில் முழக்கமிட்டார். அந்த நிகழ்ச்சி, அப்போது பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131